**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**Crl.M.P. No. 89/2026 P.W. 1 u/s. 223 of BNSS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயக்குமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.08.2026.**

**புகார்தாரர் தரப்பு வாக்குமூலம்**

நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் மனுதாரர் ஆவேன். கருங்கல் கிராம புல எண் 618/18எ யில் அரசு அனுமதியின்றி முறையான கட்டிட அனுமதியின்றி த பெந்தேகோஸ்தே என்ற கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலத்தை நடத்திவருகிறார். இவர்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் இறைவழிபாடு என்ற காரணத்தைச் சொல்லி ஒலிபெருக்கியின் மூலம் தெய்வ வழிபாடு என்று சொல்லி ஒலிபெருக்கி மற்றும் ஒலி எழுப்பும் மிசியூக்கல் Instrument மூலமாக கத்துகிறார்கள்.

2. இதனால் வீட்டிற்குள் எங்கள் பிள்ளைகளுக்கு படிக்கவோ, தூங்கவோ முடியவில்லை. அரசு அனுமதியில்லாமல் நடைபெற்று வரும் வழிபாட்டு தலத்தை நீக்க கோரி நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்தேன். அதை விசாரித்த மாண்புமிகு நீதிமன்றம் எனது புகாரை விசாரித்து உரிய உத்தரவை பிறப்பிக்குமாறு 03.04.2025ல் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு 07.11.2025ல் ஒரு உத்தரவை பிறப்பித்தார்.

3. அந்த உத்தரவில் அவர்கள் வழிபாடு நடத்துகின்ற போது எந்தவித ஒலிபெருக்கியோ, ஒலிபெருக்கி சாதனங்களையோ உபயோகப்படுத்தக்கூடாது என்று கூறி கருங்கல் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை அமல்படுத்தக்கோரி நான் 02.12.2025 அன்று கருங்கல் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். அதன் பின்பும் நான் கருங்கல் காவல்நிலைய ஆய்வாளர், விமலன் அவர்களிடம் மீண்டும் அதே புகார்

மனுக்கொடுத்தேன். அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் மேலும் 16.12.2025 அன்று கருங்கல் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு பதிவுத்தபாலில் மனு அனுப்பினேன். மேலும், அந்த விண்ணப்பத்தில் 30.11.2025 முதல் 14.11.2025 வரை அவர்கள் சத்தம் எழுப்புகின்ற சத்தத்தை என்னுடைய கைப்பேசியில் டிசிபல் என்ற ஆப் மூலமாக சத்தத்தை அளவீடு செய்தேன். அதில் 85 சதவீதம் சத்தம் உள்ளது. எனவே மாண்புமிகு நீதிமன்றம் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் உத்தவை செயல்படுத்தாமல் இருக்கின்ற கருங்கல் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் மீதும், காவல்நிலைய சட்டப்படி நடவடிக்கை எடுத்தும், அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒலிப்பெருக்கி சாதனங்களை பறிமுதல் செய்தும், அதை பயன்படுத்தி சுற்றுப்புறசூழலை மாசுப்படுத்துகின்ற நிலையயை மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்
இரணியல்.